இராமநாதபுரம் மாவட்டத்தில் பதவி இறக்கம் செய்யப்பட்ட தமிழாசிரியர்களை மீண்டும் தமிழாசிரியர் பதவிபுரிய வேண்டி தலைமைச் செயலகத்திற்கு முன்பு நடக்கவிருக்கும் உண்ணு நோன்பு குறித்து

[பேரவைத் தலைவர்] [1978 மார்ச் 8

இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்துச் சுருக்மாக விளக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். கிருஷ்ணன், திரு. சோ. பாலகிருஷ்ணன், திரு. ஜே. ஜேம்ஸ் ஆகியோர் இருக்கையில் இல்லை. ஆகவே, தள்ளப்படுகிறது.

(4) அமைச்சரின் அறிக்கைகள்.

(அ) 9—1—78-ம் நாளன்று ஒரு துணை வினாவிற்கு அளிக்கப்பட்ட விடைக்கு உள்ளாட்சித்துறை அமைச்சரின் திருத்த அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 82-ஏ (1) விதியின்கீழ் ஓர் அறிக்கை வெளியிடுவார்கள்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 82-ஏ(1) விதியின்கீழ் அவைக்கு ஓர் அறிக்கை அளிக்கின்றேன்.

9—1—1978 அன்று சட்டமன்ற குறுகிய கால வினா எண். 1 விடையளிக்கப்பட்டது. அப்போது உறுப்பினர் திரு. கிட்டப்பா வினால் எழுப்பப்பட்ட துணை வினா ஒன்றுக்கு விடையளிக்கையில் ஊராட்சி ஒன்றிய குழுக்களை அமைக்க வேண்டுமென்று கடந்த 29-ம் தேதி டிசம்பரில் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதே போல், நகராட்சி மன்றங்களுக்கும் இப்படி ஒரு குழு அமைக்க வேண்டுமென்றும் 31-ம் தேதி ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று கூறினேன். நகராட்சியைப் பொறுத்த அளவில் அரசு ஆணை 29—12—1977-ல் பிறப்பிக்கப்பட்டது. ஆனால் அது நிறுத்தி வைக்கப்பட்டு திருத்தப்பெற்ற ஆணையாக 8—2—1978-ல் பிறப்பிக்கப்பட்டது. இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(5) கவன ஈர்ப்பு.

முதுகுளத்தூர் தாலூகா, சாயல்குடி கிராமம், காந்திநகர், வி. வி. ஆர் காலனியில் வீடுகள் தீப்பற்றி எரிந்ததால் ஏற்பட்ட சேதம் குறித்து.